Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 648/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியமூர்த்தி | Calling: | உதவி பொறியாளர் |
| Husband 's Name: | கோபால் | Religion: | |
| Village: | வாணியம்பாடி | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 08.01.2026 நேரம் : 01.15 PM

(எதிரி ஆஜர். ) ( இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.)

அ.சா.1 முதன்மை விசாரணை.

நான் வாணியம்பாடியில் வசித்து மின்சார வாரியம் அம்பலூர் கிளையில் உதவி பொறியாளராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 01.10.2025 ம் தேதி மேற்படி கிளையில் உதவி பொறியாளராக பணிபுரிந்த வந்த போது காலை 10.00 மணியளவில் மல்லாங்குப்பம் பிரனீவா அகர்பத்தி கம்பெனியில் மின் அளவீடு எடுத்துவிட்டு அந்த கம்பெனியின் வெளியே வந்த போது ஆஜர் எதிரி எங்கள் மின்சார வாரியத்திற்கு சொந்தமான 189 மீ மின்சார கம்பியை இருசக்கர வாகனத்தில் எடுத்து சென்றார். அவரை நிறுத்தி மேற்படி கம்பியை எங்கிருந்து எடுத்து வருகிறாய் என்று ஆஜர் எதிரியிடம் நான் கேட்டேன். அதை காசு கொடுத்து குருராஜாபாளையம் ஒயின்சாப் பக்கத்தில் இருந்து வாங்கிவருவதாக சொன்னார். அதற்கு இதை யாரும் விற்க முடியாது என்று கூறியதற்கு ஆஜர் எதிரி முன்னுக்கு பின்னாக வீட்டில் துணிகாய வைப்பதற்காக மின்சார கம்பியை எடுத்து வந்ததாக சொன்னார். அது திருடி வந்தது என்பது உறுதியானதால் எதிரியை அதே

இடத்தில் நிற்கவைத்துவிட்டு காவல் துறைக்கு தகவல் கொடுத்துவிட்டேன். போலிசார் வந்தார்கள். நானும் லைன்மேன் சண்முகம், கேங்க் மேன் சத்தியராஜ் ஆகியோருடன் சேர்ந்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கைப்பட எழுதியதாகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி திருடி மின்சார கம்பியின் மதிப்பு ரூ. 9,700 இருக்கும். அன்றைய தினம் எதிரி இருசக்கரவாகனத்தில் மின்சார கம்பியை வைத்து எடுத்து வந்ததை எனது கைப்பேசியில் புகைப்படம் எடுத்து வைத்துள்ளேன். மேற்படி புகைப்படத்தை என்னால் தற்போதும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க இயலும். இன்று என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள மின்சார கம்பிகள் தான் எதிரி சம்பவத்தில் திருடி இருசக்கர வாகனத்தில் வைத்து சென்ற கம்பியாகும். **அந்த புகைப்படம் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர், எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சத்தியமூர்த்தி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.08 16:23:31 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 648/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியராஜ் | Calling: | கேங்க் மேன் |
| Husband 's Name: | மேகநாதன் | Religion: | |
| Village: | நாட்றம்பள்ளி | Age: | 35 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 08.01.2026 நேரம் : 02.20 PM

(எதிரி ஆஜர். ) ( இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.)

அ.சா.2 முதன்மை விசாரணை.

நான் நாட்றம்பள்ளியில் வசித்து மின்சார வாரியம் அம்பலூர் கிளையில் கேங்க் மேனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2021 ம் தேதி முதல் அம்பலூர் கிளையில் கேங்க் மேனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 01.10.2025 ம் தேதி காலை 10.00 மணியளவில் நானும் என்னுடன் JE சத்தியமூர்த்தி, Line man சண்முகம் ஆகியோர் மல்லங்குப்பத்தில் பிரனித்தா அகர்வத்தியில் மின் அளவீடு எடுத்துவிட்டு வெளியே வந்த போது (ஆஜர் எதிரியை காண்பித்து மணிகண்டன் என ஆஜர் எதிரியை அடையாளம் காண்பித்து கூறினார்.) மணிகண்டன் இபி சர்வீஸ் லைன் கம்பியை எடுத்து கொண்டு எங்களை கடந்து சென்றார். அவரை தடுத்து நிறுத்தினோம். முதலில் எங்கள் JE ஆஜர் எதிரியிடம் இந்த கம்பியை எங்கிருந்து எடுத்து வருகிறீர்கள் என்று கேட்டதற்கு ஒடுக்கத்தூர் பக்கம் குருராஜாபாளையம் என்ற இடத்தில் இருந்து வாங்கி வருவதாக சொன்னார். பிறகு அங்கிருந்து எடுத்து வந்தேன், இங்கிருந்து எடுத்து வந்தேன் என்று மாறி மாறி சொன்னார்.

அதனால் காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னார். பிறகு காவல் நிலையத்திற்கு நாங்கள் அனைவரும் சென்றோம். அங்கு மேற்படி மின்சார கம்பியை மிசினில் அளந்து பார்த்தபோது 189 மீ இருந்தது. அதன்பிறகு அ.சா.1 அதன் அளவு மற்றும் தோராய மதிப்பு ஆகியவற்றை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் . இதுக்குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி ஆஜர், எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சத்தியராஜ்.

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.08 16:23:37 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 648/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –3

| | | | |
|---|---|---|---|
| Name: | சண்முகம் | Calling: | மின்பாதை ஆய்வாளர் |
| Husband 's Name: | சின்னன்னன் | Religion: | |
| Village: | கொடையாஞ்சி | Age: | 50 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 08.01.2026 நேரம் : 02.30 PM

(எதிரி ஆஜர். ) ( இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார்.)

அ.சா.3 முதன்மை விசாரணை.

நான் கொடையாஞ்சியில் வசித்து மின்சார வாரியம் அம்பலூர் கிளையில் மின்பாதை ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2019 ம் தேதி முதல் அம்பலூர் கிளையில் மின்பாதை ஆய்வாளராக வேலை பார்த்து வருகிறேன். 01.10.2025 ம் தேதி காலை 10.00 மணிமுதல் 10.30 மணியளவில் எங்களின் JE சத்தியமூர்த்தி , கேங்க்மேன் சத்தியராஜ் ஆகியோர் எலக்டிரிசிட்டி சர்வீஸ் அகர்பத்தி கம்பெனிக்கு மின்அளவீடு செய்வதற்காக சென்றனர். அங்கு போய்விட்டு வெளியே வரும்போது ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான மின்கம்பி ஒயிரை எடுத்து சென்றவரை நாங்கள் பிடித்துவிட்டோம். உடனடியாக மல்லங்குப்பம் வரும்படியாக அ.சா.1 என்னை அழைத்தார். சுமார் 5 நிமிடத்திற்குள் அங்கு சென்றுவிட்டேன். நான் அங்கு செல்வதற்குள் காவல் துறையில் இருந்து இரண்டு நபர்கள் அங்கு வந்து விட்டு இருந்தார்கள். இருசக்கர வாகனத்தில் கம்பி எடுத்து வந்த நபரை பார்த்தேன். அவர் பெயர்

மணிகண்டன் என்று சொன்னார். வாகனத்தின் பெயர் தெரியவில்லை. பெரிய இருசக்கர வாகனம். மேற்படி மணிகண்டனை தற்போது என்னால் பார்த்தால் அடையாளம் கூற இயலும். சாட்சி ஆஜரான எதிரியை காண்பித்து அவர்தான் என்று கூறினார். காவல் துறையினர் எங்களையும் மணிகண்டனையும் காவல் நிலையம் அழைத்து சென்றனர். என்னை சாட்சியாக விசாரித்தனர்.

எதிரி ஆஜர், எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சண்முகம்.

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.08 16:23:42 +0530